## தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 23 | காலை 9.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடி நாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள், போடி நகரம், பழனி செட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

**தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**

திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், இ.மணி, நகரச் செயலாளர்கள் பட்டூர் எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, சதீஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்புரை!

# மயிலாடுதுறையில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

*மயிலாடுதுறை. மார்ச்.23*

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டமயிலாடுதுறை நகர கழகம், மயிலாடுதுறை மேற்கு கிழக்கு ஒன்றிய கழகம், குத்தாலம் வடக்கு ஒன்றிய கழகம் மற்றும் குத்தாலம் பேரூர் கழகம் ஆகியவற்றின் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் செயல்வீரர்கள் கூட்டம் மயிலாடுதுறை ஏ.ஜே.கே. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம்.மூர்த்தி, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.முருகமணி, குத்தாலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கு. வைத்தியநாதன், குத்தாலம் பேரு செயலாளர் எம். சம்சுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை நகர கழக செயலாளர் நகர மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்றார்

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி சிறப்புரையற்றினார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருள்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை. சௌமியன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் எஸ். செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், பி சிவதாஸ்,

நத்தம் ஏ. வின்சென்ட், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, எஸ்.செல்வராஜ், இரா மனோகரன், வி.எஸ்.பிரபாகர், இராஜ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி.திருமாவளவன், விஜய், சௌ.சர்வோதயன், மயிலாடுதுறை நகர் மன்ற துணைத் தலைவர் எஸ். சிவகுமார், மயிலாடுதுறை நகர கழக நிர்வாகிகள் ஆர்.நடராஜன், மலைக்கோயில் எம்.பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை. தெய்வநாயகம், மேனகா மாரியப்பன், எம்.குமார், மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் எம். பாலு ,ஜி. இளஞ்செழியன், ஆர்.கே.சரவணன், எஸ். குமாரசாமி, டி. சிவக்குமார், எஸ்.அற்புதராஜ், பாரதிமதியழகன், ஆர். கருணாநிதி, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் சிவ. கோபாலகிருஷ்ணன், கே. ராஜேந்திரன், ஜி. அசோகன், எஸ்.வெங்கடேசன், சி.மதரகோபால்,. இதயச்சந்திரன், பத்மாதேவிசீனிவாசன், சபரி ராஜா, குத்தாலம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏ.செல்லகுட்டி,வெங்கட்ராஜ் சாமிசெல்வம், மு.புகழேந்திரன், செந்தில்குமார் அருணாரவி, சம்சுநிஷாஹாஜாமைதீன், வெடி எஸ். பாலமுருகன், குத்தாலம் பேரூர் கழக நிர்வாகிகள் பி. கோபால கிருஷ்ணன்,, ப.உலகநாதன், எஸ். ஐயப்பன். கே.குமார், எஸ்.சுந்தர்ராஜன், ச.செந்தில், வி.கண்ணையன் மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளில் முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்

### கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

கழகத் தலைவர் தளபதியின் தாரக மந்திரமான வெல்வோம் 200 + , படைப்பு வரலாறு! என்பதற்கு இனங்க கழகத் தலைவர், திராவிட மாடல் அரசர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செய்த மகத்தான சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்துக்கூறி, பிரச்சாரம் செய்து அனைவரையும் தி.மு.க. வாக்காளர்களாக மாற்றி, கழகத் தலைவர் தளபதி அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப் பெற கழக நிர்வாகிகள், கழகத்தினர் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி வெற்றிக்கு உழைத்து கழகத் தலைவர் கரத்தை உயர்த்தி தமிழ் நாட்டில் மீண்டும் திராவிட மாடல் அரசு 2.0 அமைய மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி கழகத் தலைவர் அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற செய்ய ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தினர் பாடுபடுவோம் என்றும்,

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7 வது முறையாகவும், கழகத் தலைவர் தளபதி தலைமையில் 2 முறையாக முதல்வராக கழக ஆட்சி அமைந்திட உழைத்திடுவது என்றும்,

தலைமை கழகத்தால் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி) ஆகியோரிடம் வாக்காளர் பற்றிய முழு விபரம் குறித்து கணக்கெடுப்பு எடுக்க வழங்கப்பட்ட நோட்டை உடன் முழுமையாக பூர்த்தி செய்து அந்த பணியை முடித்து ஒன்றிய கழக செயலாளர்களிம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி).யினர் வழங்கிடவேண்டும். என்றும், ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பூத் வாரியாக ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறியும், 5 ஆண்டு கால திராவிட மாடல் அரசால் அந்த குடும்பத்தினர் பெற்ற நலத்திட்ட உதவிகளை எடுத்துக்கூறி பிரச்சாரம் மேற்கொண்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படையினருக்கும், மகளிர் படையினருக்கு உரிய ஏற்பாடுகளை செய்த ஒன்றிய, பேரூர் செயலாளர்களுக்கும், உறுதுணையாக நின்ற கிளை, வார்டு கழக நிர்வாகிகளுக்கும் கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், கழக நிர்வாகிகள் புதிய வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்து கழகம் மற்றும் கழக ஆதரவு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை வரும் 26 ஆம் தேதிக்குள் படிவம் 6 பூர்த்தி செய்து தேர்தல் அலுவலரிடம் வழங்கி வாக்காளர் சேர்த்தல் முயற்சியில் கழகத்தின் ஈடுபட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேளச்சேரி மேற்கு பகுதி கழக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர் வே.ஆனந்தம், மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி. மணிமாறன், மாவட்டப் பொருளாளர் எஸ். பாஸ்கரன், மாற்றுத்திறனாளிகள் அணி மாநில செயலாளர் தீபக், மாநிலத் துணைச் செயலாளர் யாழினி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் நாடிமுத்து மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## ஈரோட்டில் இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

*ஈரோடு, மார்ச். 23- ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 2026 தேர் தலையொட்டி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று ( 23.3.2026 திங்கட்கிழமை) மாலை 3.00 மணியளவில் மேட்டுக் கடை, தங்கம் மஹாலில் நடைபெற உள்ளது.*

*எனவே மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்து சாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்*

# இரண்டாவது முறையாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர மக்கள் விருப்பம்!

## காளையார்கோவில் பரப்புரைக் கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு! கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

*சிவகங்கை, மார்ச் 23 -*

*முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் 'தமிழ் நாடு தலைகுனியாது' என்ற தலைப்பில் தென் மாவட்டங்களில் பொதுக் கூட்டங்களில் பேசிவருகிறார்.*

*அதன் தொடர்ச்சியாக சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காளையார்கோவிலில் தனியார் மகாலில் 'தமிழ்நாடு தலை குனியாது' ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும் என்ற தலைப்பில் பரப்புரை கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது:-*

*40 ஆண்டுகளுக்கு மேலாக அ.தி.மு.க.வில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு விசுவாசமாக கட்சிப் பணியாற்றி முதல்வர் பணியாற்றி வந்தேன். கட்சிக்கு விசுவாசமாக தொண்டர்களை அரவணைத்து சென்றேன். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி துரோகத்தால் இன்று அ.தி.மு.க. சிதறி கிடக்கிறது.*

*கட்சிக்காக உழைத்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். உருவாக்கிய முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் வளர்க்கப்பட்ட கட்சி மிகவும் வளர்ச்சி குன்றி போய்க்கொண்டிருக்கிறது. பா.ஜ.க.விடம் அ.தி.மு.க.வை எடப்பாடி பழனிச்சாமி அடகு வைத்து விட்டார். இந்த கட்சிக்கும், முதல்வர் புரட்சித்தலைவர் வளர்த்த கட்சிக்கு துரோகம் செய்து விட்டார். துரோகி என்றால் அது எடப்பாடி பழனிச்சாமி என்று அனைத்து மக்களுக்கும் தெரிந்து விட்டது. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரால் உருவாகி முதல்வர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் இயங்கிய அ.தி.மு.க. 100 ஆண்டுகளுக்கு மேலாக இந்த கட்சி இருக்கும் என்று கூறினார்கள். ஆனால் இன்று. எடப்பாடி பழனிச்சாமி செயலினால் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து வருகிறது. அ.தி.மு.க.வில் உள்ள யாருக்கும் தெரியாமல் டெல்லியில் பா.ஜ.க. விடம் எடப்பாடி பழனிச்சாமி இந்த கட்சியினை அடகு வைத்து விட்டார். அ.தி.மு.க.வின் தலைமை சென்னையில் கிடையாது. டெல்லியில் உள்ளது. பா.ஜ.க., அ.தி.மு.க.வை இயக்குகிறது.*

*பா.ஜ.க. என்ன சொல்கிறார்களோ அதை நிறைவேற்றும் முதல் ஆளாக எடப்பாடி பழனிச்சாமி இருந்து வருகிறார். அ.தி.மு.க.வில் இரண்டாம் கட்ட தலைவர்கள் வேறு வழியின்றி அவர்கள் கட்சியில் உள்ளார்கள். வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நல்லாட்சி நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர வேண்டும். அதற்காக நான் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறேன். நான் செல்லும் இடங்கள் ஐந்தாண்டு கால சிறப்பான ஆட்சி நடத்தி வரும் முதல்வர் ஸ்டாலினுக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. இதை நான் செல்லும் இடங்களில் காண்கிறேன். ஐந்து ஆண்டுகளில் குறிப்பாக பெண்களுக்கு பல் வேறு நலத்திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வெற்றி அடைந்துள்ளார். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டிற்கு நிதிதருவதில்லை. தளபதி தலைமையிலான ஆட்சியை வஞ்சித்து வருகிறது. அதையெல்லாம் மீறி முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சியினை திறம்பட நடத்தி வருகிறார்.*

*இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. நம்பர் ஒன் முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர்கள் விளங்கி வருகிறார். நான் நீண்ட யோசனைக்கு பிறகு அண்ணா உருவாக்கிய தாய் கழகமான தி.மு.க.வில் இணைந்து உள்ளேன். என்னை கழகத்த லைவர் முதல்வர் தளபதி அவர்கள் தாய் உள்ளத்துடன் வரவேற்றார். என்னை அரவணைத்து கட்சியில் இணைத்துக் கொண்டார். என்னுடன் ஏராளமான தொண்டர்கள் கட்சியில் இணைந்தார்கள். அவர்களையும் அன்புடன் வரவேற்றார். தொடர்ந்து அ.தி.மு.க.விலிருந்து விலகி தாய்க்கழகமான தி.மு.க.வில் இணைய உள்ளார்கள். 2026 தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க. என்ற கட்சி காணாமல் போய்விடும். பா.ஜ.க. அதைச்செய்துவிடும். தமிழகத்தின் உரிமைக்காக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அயராது முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் அயராது பாடுபட்டு வருகிறார். தமிழர்களின் உரிமைக்காக முதல் ஆளாக குரல் கொடுத்து வருகிறார்.அத்தகைய தமிழர்கள் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றும் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக ஆட்சியில் அமர வேண்டும். ஏழாவது முறையாக தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும். இதற்காக நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களை சந்தித்து வருகிறேன். மக்களிடம் இந்த ஆட்சி தொடர வேண்டும் என்ற எண்ணத்தை நான் நேரடியாக காண்கிறேன். இதற்கு சிவகங்கை மாவட்ட மக்களாகிய நீங்களும் ஆதரவு தர வேண்டும். இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.*

*இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.பி.க்கள் கோபாலகிருஷ்ணன், ஓ.பி.எஸ்.ரவீந்திரநாத், முன்னாள் எம்.எல்.ஏ. ஐயப்பன், காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சுந்தரராஜன், மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ்ருசோ,கல்லல் கே ஆர்.அசோகன் ஆகியோர் பேசினார்கள்.*

*இந்த கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் யோக கிருஷ்ண குமார், வே.ஆரோக்கியசாமி, ஆர். எம்.கென்னடி, நா.நெடுஞ்செழியன், எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், அ.முத்துச்சாமி, பெ.மந்த காளை, சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், பேருர் கழகச் செயலாளர் ஜெயராமன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, எஸ்தர் மேரி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துகுமார், நிர்வாகிகள் வரதராஜன், இலக்கிய அணி அழகையா, இளங்கோ, இளைஞரணி மோகன்ராஜ், ஆர்.வி. எஸ். அரங்கநாதன், ஆர். கோதண்டபாணி, தோக்கப்பன். இலக்கிய அணி துணை அமைப்பாளர் குரு. போஸ், கண்ணதாசன் மற்றும் ஒன்றிய, பேரூர், நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.*

ரம்ஜான் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் கடம்பத்தூர் ஒன்றியம் மணவாளநகர் அண்ணா நகர் பகுதியில் உள்ள மஸ்ஜித் உமர்பின் கத்தர்ப் பள்ளிவாசலில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி.ஆர்.பிரபாகரன் தலைமையில் தொழுகை நடத்த வருகை புரிந்த இஸ்லாமிய பெருமக்களுக்கு மத நல்லிணக்கத்தை கடைபிடிக்கும் வகையில் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பங்கேற்றார்கள் இதில் நிர்வாகிகள் தாடி நந்தகோபால், புட்லூர் ராஜேந்திரகுமார், சி.ஆர்.குமரன், கொப்பூர் திலீப்குமார், ராம்கி, மண்புகழ் மனோகரன், பெரியசாமி, பாலசுப்பிரமணியம், ஜானகிராமன், ராம்தாஸ், ஜெய்பிரகாஷ், பாபு, பழனி, சதீஷ், ராஜேஷ், வாட்டர் கார்த்திக், மோகன்,அன்பழகன் அண்ணாமலை சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.